நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம்,
எம்.ஆர்.சி. நகர். சென்னை–28.

ந.க.எண். 31159/2018/டிபி3

நாள். 05.03.2019.

## சுற்றறிக்கை

பொருள் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் – 2019 – உள்ளாட்சிகளில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்கல் குறித்த நடைமுறைகள் – சம்பந்தமாக.

பார்வை:

1. அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 04.02.2019.
2. தமிழ்நாடு அரசிதழ் எண். 43, பகுதி III பிரிவு 1(a) நாள். 04.02.2019.

*********

பார்வை 2–ல் காணும் அரசிதழில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சிகளில் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனமதி வழங்குவது தொடர்பாக தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள்–2019 ஆணை வெளியிடப்பட்டுள்ளதன் தொடர்ச்சியாக கீழ்காணும் பணிகளை கடைபிடிக்குமாறு அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆணையர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் மற்றும் அனுமதி வழங்கும் நடைமுறைகள் தற்போது நடைமுறையில் உள்ள இணையதளவழியில் பின்பற்றப்பட வேண்டும்.
2. உள்ளாட்சிகளால் வழங்கப்படும் திட்ட அனுமதி தற்போதுள்ள அதிகார பகிர்வு அடிப்படையில் மட்டுமே வழங்கப்படவேண்டும்.
3. தற்பொழுது கட்டிட விண்ணப்பத்துடன் கூர்ந்தாய்வு கட்டணமாக பெறப்படும் ரூ.500/–யை பதிவு கட்டணமாக தொடர்ந்து வசூலிக்க வேண்டும். கூடுதலாக விதி எண். 7(2)–ல் குறிப்பிட்டுள்ளவாறு, நடைமுறையில் உள்ள அதிகார பகிர்வுக்கு உட்பட்டு திட்ட அனுமதிக்கான கூர்ந்தாய்வு கட்டணம் உள்ளாட்சிகளால் வசூலிக்கப்பட்டு உரிய தலைப்பில் செலுத்தப்படவேண்டும்.
4. விதி எண். 30(1), (2)–ல் குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு மாநகராட்சி / நகராட்சியிலும் தொடர் கட்டுமான பகுதிகள் (Continuous Building Area) மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதி (EWS) ஆகியவற்றை கண்டறிந்து, அவற்றின் சர்வே எண்கள் மற்றும் தேவையான விவரங்களை தயார் செய்து, மன்ற ஒப்புதலுடன் 08.03.2019–க் குள் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
5. மேற்படி தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன் விதி 14ல் கட்டட அனுமதி காலம் 5 ஆண்டுகள் மற்றும் ஒருமுறை காலநீடிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால், கட்டிட அனுமதி கட்டணத்தை 5 ஆண்டுகளுக்கு அனுமதி வழங்குவதற்கேற்பவும், கால நீடிப்பு காலத்தை 3 ஆண்டுகளுக்கு வழங்குவதற்கேற்பவும், மன்ற ஒப்புதலுடன் மாற்றியமைத்து விதிகளின்படி கட்டண

விகிதங்களை பிரசுரம் செய்து நடைமுறைப்படுத்தப்படவேண்டும் எனவே,08.03.2019–க்குள் மன்ற ஒப்புதல் பெற்று பிரசுர நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து மாநகராட்சி / நகராட்சி ஆணையர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/– மா. அசோகன்
நகராட்சி நிர்வாக ஆணையருக்காக

பெறுநர்–
அனைத்து மாநகராட்சி / நகராட்சி ஆணையர்கள்

நகல்–
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

05/03/19
கண்காணிப்பாளர்